**மீகஹகிவுல பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**

-----------------------------------------------

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2014 மே 28 ஆந் திகதியன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 04 ஆந் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 செப்டம்பர் 16 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிசார் கூற்றுக்களில் ஏற்பட்ட தாக்கங்களைத் தவிர, நிதிசார் கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு அமைய தயாரிக்கப்பட்டிருந்தன என்றும் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மீகஹகிவுல பிரதேச சபையின் நடவடிக்கைகளது நிலைமை மற்றும் முடிவுற்ற அவ்வாண்டிற்கான அதன் செயற்பாட்டினது நிதிசார் விளைவுகள் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றினது உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலையைக் காட்டுகின்றன என்பதும் எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பெற வேண்டிய கணக்கு மீதி ரூபா 8,090,902 ஆகும். அத்தினத்தில் உள்ளவாறான கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்கு மீதி ரூபா 12,709,110 ஆகும்.

#### 1.3.2 கணக்காய்விற்கான சான்றின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 20,638,947 கூட்டுத்தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

#### 1.3.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், என்பவற்றுடன் இணங்காமை

**கணக்**காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 132 ஆம் பிரிவு | உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரது முன்கூட்டிய அங்கீகாரமின்றி சமுதாய அடிப்படையிலான நிறுவனங்களுக்கு பொருட்களை வழங்குவதற்கு ஒரு சந்தர்ப்பத்தில் ரூபா 12,500 செலவிடப்பட்டிருந்தது. |
| (ஆ) | 1988 பிரதேச சபைகள் (நிதியும் நிர்வாகமும்) விதிக் கோவை 180 ஆம் விதி | வருவாய்ச் சேகரிப்பில் ஈடுபட்டுள்ள காசு அல்லது களஞ்சியங்களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களால் பிணை வைப்புச் செய்யப்படவில்லை. |
| (இ) | இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் 571 | வைப்பிலிடப்பட்டு 2 ஆண்டுகளுக்குள் கோரப்படாதுள்ள ரூபா 16,000 வைப்பானது வருவாயிலிடப்படவில்லை. |

| (ஈ) | திறைசேரிச் செயலாளரின் 2008 மார்ச் 13 ஆந் திகதிய பீஎவ்/427/1 இலக்கச் சுற்றறிக்கை | சபைக்குரிய UPRB - 9997 இலக்க டிறக்டர் காப்புறுதி செய்யப்படவில்லை. |
|---|---|---|

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2013 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான வருவாயிலும் கூடிய மீண்டுவருஞ் செலவினம் ரூபா 218,966 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் வருவாயிலும் கூடிய மீண்டுவருஞ் செலவினம் ரூபா 687,861 ஆகியதால் ரூபா 468,895 சாதகமான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**2.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு**

நிதிசார் விளைவுகளின் நிகர அதிகரிப்பின் பகுப்பாய்வுடனான மீளாய்வு கீழே காணப்படுகின்றது.

| **மீண்டுவரும் வருவாய்** | **2013** | **2012** | **வேறுபாடு** | |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| தீர்வையும் வரியும் | 753,018 | 1,068,842 | (315,824) | |
| குத்தகை வாடகை | 1,780,358 | 1,461,050 | 319,308 | |
| அனுமதிப் பத்திரம் | 320,299 | 346,606 | (26,307) | |
| சேவைக் கட்டணம் | 758,687 | 839,223 | (80,536) | |
| பிடி ஆணைக் கட்டணமும் தண்டப் பணமும் | 637,904 | 366,886 | 271,018 | |
| பிற வருவாய் | 295,025 | 300,160 | (5,135) | |
| வருவாய்க்கான உதவி | 8,603,698 | 7,491,177 | 1,112,521 | |
| | | | ---------------- | 1,275,045 |
| **மீண்டுவருஞ் செலவினம்** | | | | |
| சம்பளமும் படியும் | 9,888,554 | 9,099,155 | (789,399) | |
| பயணச் செலவினம் | 309,686 | 290,499 | (19,187) | |
| வழங்கலும் சேவைகளும் | 317,658 | 433,432 | 115,774 | |
| மூலதனச் சொத்துப் பழுதுபார்ப்பும் பராமரிப்பும் | 1,764,276 | 2,020,119 | 255,843 | |
| போக்குவரத்தும் பாவனைச் சேவைகளும் | 656,,641 | 547,433 | (109,208) | |
| வட்டிக், பங்கிலாப மிகையூதியக் கொடுப்பனவு | 10,000 | - | (10,000) | |
| உதவிப் பணம், உதவு தொகை மற்றும் நிவாரணத் தொகை | 347,963 | 72,245 | (275,718) | |
| ஓய்வூதியம், ஓய்வூதிய நலன் மற்றும் பணிக்கொடை | 73,178 | 98,923 | 25,745 | |
| | | | ---------------- | 806,150 |
| சாதகமான வேறுபாடு | | | | 468,895 |
| | | | | ======= |

**2.3 வருவாய் நிர்வாகம்**

**2.3.1 வருவாய்ச் சேகரிப்புச் செயலாற்றல்**

நீர்க் கட்டணம், கடை வாடகை என்பவற்றினது 2013 ஜனவரி 01 இல் உள்ளவாறான நிலுவைகளில் 74 சதவீதத்திற்கும் குறைந்த பெறுமதியிலான அறவீடுகளே மேற்கொள்ளப்பட்டிருந்தன. நீர்க்கட்டணமாக ஆண்டின்போது அறவிடப்படவிருந்த வருவாயில் 68 சதவீதத்துக்கும் குறைவான அறவீடே மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**2.3.2 குத்தகை வாடகை**

2006 ஆம் ஆண்டிற்கான மீகஹகிவுல நகர வாரச் சந்தைக் குத்தகை வாடகை நிலுவையான ரூபா 123,181 மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் அறவிடப்படாதிருந்தது.

### 2.3.3 நீதிமன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபைத் தலைமைச் செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும் பின்வருமாறு.

| | ரூபா |
|---|---|
| நீதிமன்றத் தண்டப் பணம் | 383,373 |
| முத்திரைக் கட்டணம் | 1,151,471 |
| | 1,534,844 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

2002 ஆம் ஆண்டிற்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு, செலவுத் திட்ட நிதியேற்பாட்டின் கீழ் ரூபா 533,100 செலவில் டொலமைட் செயற்திட்டத்திற்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடமானது அச்செயற்திட்டம் ஆரம்பிக்கப்படாது கைவிடப்பட்டதால் 2003 ஆம் ஆண்டு முதல் பயனற்றிருந்தது.

### 3.2 கழிவுகளை அகற்றுதல்

சபை திண்மக் கழிவு முகாமைத்துவச் செயற்திட்டத்தை அமுலாக்கவில்லை. சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் சேகரிக்கப்படும் கழிவுகள் பதுளை வீதியில் உள்ள 13 ஆம் மைல் கல்லுக்கு அருகாமையில் உள்ள இடமொன்றில் முறையற்றவாறு அகற்றப்பட்டவாறிருந்தது.

## 4. கணக்களி தகைமையும் நல்லாளுகையும்

### 4.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

சபை மீளாய்வாண்டின் பொருட்டுத் தயாரித்துச் சமர்ப்பித்த நிதிசார் கூற்றுக்கள் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப தயாரிக்கப்படவில்லை.

### 4.2 வரவு, செலவுத்திட்டக் கட்டுப்பாடு

சபையின் 2013 ஆம் அண்டிற்கான வரவு, செலவுத் திட்டமிடப்பட்ட வருவாயும் செலவினமும் உள்ளவாறான வருவாய், செலவினம் என்பவற்றுடன் ஒப்பிடப்படுகையில் கீழே குறிப்பிடப்பட்ட வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| மீண்டுவரும் வருவாய் | வரவு, செலவுத் திட்டமிடப்பட்டது | உள்ளவாறானது | வேறுபாடு | வேறுபாட்டின் சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| தீர்வையும் வரியும் | 1,153,000 | 753,018 | 399,982 | 34.6 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 200,500 | 320,299 | 119,799 | 59.7 |
| சேவைக் கட்டணம் | 2,505,000 | 758,687 | 1,746,313 | 69.7 |
| ஏனைய வருவாய் | 374,000 | 295,025 | 78,975 | 21.1 |
| வருவாய்க்கான உதவி | 7,518,294 | 8,603,698 | 1,085,404 | 14.4 |
| **மீண்டுவருஞ் செலவினம்** | | | | |
| பயணச் செலவினம் | 360,000 | 309,686 | 50,314 | 13.9 |
| வழங்கலும் உபகரணங்களும் | 437,000 | 317,658 | 119,342 | 27.3 |
| மூலதனச் சொத்துப் பழுதுபார்ப்பும் பராமரிப்பும் | 2,050,000 | 1,764,276 | 285,724 | 13.9 |
| போக்குவரத்தும் பாவனைச் சேவைகளும் | 815,000 | 656.641 | 158,359 | 19.4 |
| உதவிப்பணம், உதவுதொகை, நிவாரணத் தொகை | 272,500 | 347,963 | 75,463 | 27.6 |
| ஓய்வூதியம், ஓய்வூதிய நலன், பணிக்கொடை | 142,304 | 73,178 | 69,126 | 48.5 |

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) களஞ்சியக் கட்டுப்பாடு